பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 11 2025** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்கில் பங்களாதேஷ் முன்னாள் அதிபர் திருமதி ஷேக் ஹசீனாவுக்கு, அந்நாட்டு சர்வதேச தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்துள்ளது.

2) குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-விடம், 16-ஆவது நிதி ஆணையத்தின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

3) பீகாரில் புதிய அரசு அமைப்பதற்கான ஆயத்தப்பணிகள் தீவிரமடைந்துள்ளன.

4) நாடு முழுவதும் 7 கோடிக்கும் மேற்பட்ட சிறு-குறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5) **Deaflympics** போட்டியில் இந்தியாவின் **Anuya Prasad** தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பங்களாதேஷ் முன்னாள் அதிபர் திருமதி ஷேக் ஹசீனாவிற்கு, அந்நாட்டு சர்வதேச தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரணை செய்த நீதிபதி **Golam Mortuza Mozumder** தலைமையிலான மூன்று நீதிபதிகளை கொண்ட அமர்வு, இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது

முன்னாள் உள்துறை அமைச்சர் திரு **Asaduzzaman Khan Kamal-**க்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களை புரிந்ததாக கூறி, இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தீர்ப்பு பாரபட்சமானது என்று திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்படாத அரசு மற்றும் ஜனநாயக நெறிமுறைகளை பின்பற்றாமல், ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பாயம் வழங்கியுள்ள தீர்ப்பு

ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-விடம், 16-ஆவது நிதி ஆணையத்தின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் தலைவர் டாக்டர் **Arvind Panagariya** குடியரசுத் தலைவரை சந்தித்து இதனை சமர்ப்பித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் வடக்கு மண்டல குழுமத்தின் கூட்டம் இன்று **Faridabad**-ல் நடைபெற்றது.

ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் தில்லி முதலமைச்சர்களும் இதில் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வளர்ச்சிப்பணிகள், நதிநீர் பங்கீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

நார்வே உடன் சுகாதாரத்துறை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதில் இந்தியா ஆர்வத்துடன் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள நார்வே சுகாதாரத்துறை அமைச்சர் திரு **Jan Christian Vestre**-வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் சுகாதாரம், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து, நோய் தடுப்பு ஆராய்ச்சிப்பணிகள் போன்றவை குறித்து அவருடன் விரிவாக விவாதித்ததாகவும் திரு நட்டா அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இன்று தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அரங்கினை திறந்துவைத்து அவர் பேசினார்.

தொழிலாளர்களின் நிதி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத்துறையில் இந்தியா சர்வதேச அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் விமான நிலைய ஆணையங்களின் அரங்கினை திறந்துவைத்து அவர் பேசினார்.

இந்த அரங்கில் விமானங்களின் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் விமான நிலையங்களை நவீன மயமாக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 7 கோடிக்கும் மேற்பட்ட சிறு-குறு தொழில்நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இன்று சிறு-குறு தொழில்துறையின் அரங்கினை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சிறு-குறு தொழில்துறை 30 கோடிக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருவதாக அவர் கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இந்த எண்ணிக்கையை 60 கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பீகாரில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெற்றதையடுத்து, முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அமைச்சரவையை கலைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத்தொடர்ந்து திரு நிதிஷ்குமார், ஆளுநர் திரு ஆரிப் முகமது கானை சந்தித்து அமைச்சரவை முடிவு குறித்த கடிதத்தை வழங்கினார்.

பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நாளையும், ஐக்கிய ஜனதாதள கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நாளை மறுநாளும் நடைபெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புதிய அரசு பதவியேற்பு விழா, பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்றும், இதற்கான ஆயத்தப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாமில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 27-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி வெளியிடப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் இதுவரை 98 சதவீத வாக்காளர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் மற்றொரு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த உத்தரப்பிரதேசத்தை உருவாக்குவது, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளமாக அமையும் என்றார்.

உத்தரப்பிரதேசத்தில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் வளர்ச்சிப்பணிகள் வேகமடைந்துள்ளதாகவும் திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியா — இங்கிலாந்து இடையேயான கூட்டு ராணுவப்பயிற்சி இன்று ராஜஸ்தானில் தொடங்கியது.

வரும் **30-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த கூட்டு பயிற்சியில், இருநாடுகளின் ராணுவத்தை சேர்ந்த **240** பேர் பங்கேற்றுள்ளனர்.

**Bikaner-**ல் உள்ள சர்வதேச பயிற்சி மையத்தில் இவர்கள் இந்த கூட்டு பயிற்சியை மேற்கொள்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

துபாய் விமான கண்காட்சி இன்று தொடங்கியது.

அந்நாட்டு துணை அதிபர் **Sheikh Mohammed Bin Rashid Al Maktoum** இதனை தொடங்கிவைத்தார்.

**115** நாடுகள் இதில் பங்கேற்றுள்ளன.

இந்தியாவின் சார்பில் மத்திய இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் தலைமையிலான குழுவினர் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Deaflympics** போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பத்து மீட்டர் துப்பாக்கிச்சுடும் பிரிவில் **Anuya Prasad**

தங்கப்பதக்கத்தையும், **Pranjali Dhumal** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை **2** தங்கம், **4** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

------------

உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Pawan Bartwal** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **55** கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Altynbek Nursultan** -ஐ வென்றார்.

ஆடவர் **75** கிலோ எடைப்பிரிவில் **Sumit Kundu**-வும், **90** கிலோ எடைப்பிரிவில் நவீன்குமாரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------------

உத்தரப்பிரதேசத்திற்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி வலுவான நிலையில் உள்ளது.

கோவையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் உத்தரப்பிரதேச அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **87** ரன் எடுத்துள்ளது.

**முன்னதாக, தமிழக அணி முதல் இன்னிங்சில் 455 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**-------------**

**உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Gurpreet Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.**

**<<<<<<END>>>>>>**